





2


# பருத்தி விளைச்சலில் 12% கூடுதல் மகசூல்!

## - அமுல் பயோ பெர்டிலைசர்ஸ் பயன்படுத்தி சாதனை!!

**வணக்கம்.** நான் திரு. நிதேஷ் பல்தானியா. அமுல் பயோ ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனத்தில் அக்ரோனமிஸ்ட்டாகப் பணிபுரிகிறேன். எங்கள் நிறுவனத்தின் தலைமையகம் சென்னை, அடையாறில் உள்ளது. அமுல் ஆர்கானிக் உயிர் உரத்தின் சிறப்புகள் குறித்த ஒரு தகவலை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

குஜராத் மாநிலத்தின் சௌராஷ்டிரா பகுதியில் சுமார் 400 விவசாயிகள், 1,000 ஏக்கர் நிலத்தில் அமுல் பயோ ஃபெர்டிலைசரைப் பயன்படுத்தி கலப்பின பருத்தி பயிர் செய்தார்கள்.

அடியுரமாக ஒரு ஏக்கருக்கு அமுல் கோல்டு 5 மூட்டைகள் (1 மூட்டை 50 கிலோ), அமுல் பவர் பிளஸ் (PROM) 4 மூட்டைகள் (1 மூட்டை 50 கிலோ) பயன்படுத்தப்பட்டன. கடைசி உழவின்போது அமுல் கோல்டு மற்றும் அமுல் பவர் பிளஸ் உரங்களை நன்றாகக் கலந்து நிலத்தில் இடவேண்டும்.

பயிரின் காலம் 150 – 165 நாள்கள்.



**மகசூல்**

அமுல் உயிர் உரங்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு, ஒரு ஏக்கருக்கு 866 கிலோ பருத்தி கிடைத்தது. அமுல் உயிர் உரங்களைப் பயன்படுத்திய பிறகு, ஏக்கருக்கு 980 கிலோ மகசூல் கிடைத்தது. இது தோராயமாக 12 சதவிகிதம் அதிக மகசூல் ஆகும்.

பருத்தி மகசூலில் 12 சதவிகிதம் அதிகமாகக் கிடைத்ததால், மிகவும் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் உணர்கிறார்கள், விவசாயிகள். மேலும், சௌராஷ்டிரா பகுதி பருத்தி விவசாயிகளிடமிருந்து தொடர்ச்சியான ஆர்டர்களைப் பெற்று வருகிறோம்.

அமுல் பயோ ஃபெர்டிலைசர்ஸ் உரங்களைப் பயன்படுத்தியதன் மூலம் மண்ணின் வளம் மேம்படுத்தப்பட்டது. இதோடு மண்ணானது நுண்துளைகள் நிறைந்ததாகவும், மென்மையாகவும் மாறி, விதைகளின் முளைப்புத் திறனை உயர்த்தும் வகையில் மேம்பட்டிருக்கிறது. வழக்கமாக பயன்படுத்தும் உரத்திற்கான இடுபொருள் செலவு 50 சதவிகிதம் வரை வெகுவாகக் குறைந்துள்ளது.

**அமுல் ஆர்கானிக் உயிர் உரத்தின் தனித்தன்மை என்னவென்றால், பயிருக்கு எந்த விதமான பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலும் இல்லாமல், பயிரை நன்றாக செழித்து வளர துணை புரிகிறது. இதோடு அதிகமான மகசூல் கிடைக்கவும் உதவுகிறது.**

மேலும் விவரங்களுக்கு:
93639 41424 / 98432 92086



AOF/25





3